பக்கங்கள் : நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 மாசி 12 சனிக்கிழமை (24.02.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 91

## யாழ்.இளைஞர் ஒருவர் மன்னாரில் சடலமாக மீட்பு

மன்னார், பெப்.24

மன்னார் - பாலைக்குடிச் சந்தியில் நேற்று அதிகாலை வெட்டுக்காயங்களுடன் தமிழ் இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறுசடலமாகமீட்கப்பட்டவர்யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மரியதாஸ் கிரிதாஸ் (வயது26) என அடையாளம் காணப்பட்

(04 ஆம் பக்கம் பார்க்க)

## ஓட்டோ சாரதி மீது சூடு: திருமலையில் சம்பவம்

திருகோணமலை - பாலையூற்றுப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் ஓட்டோசாரதி ஒருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார். இவ்வாறு கொலை செய்யப்பட்டவர். திருகோணமலை - அன்னை வேளாங்

(04 ஆம் பக்கம் பார்க்க)

## ஆசிரிய கலாசாலையில் துப்பாக்கி மீட்பு என அறிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.24

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் ஆசிரியர் தங்கியிருக்கும் கட்டட அறையின் கூரையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ரி-56 ரக துப்பாக்கி ஒன்று மீட்கப்பட்டுள்ளது என பலாலி நடவடிக்கைத் தலைமையகம் நேற்றிரவு விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தகவல் ஒன்றின் பேரில் ஊரெழு படைமுகாமினர் மேற்கொண்ட தேடுதலில் இந்தத்துப்பாக்கி மீட்கப்பட்டது என்று படைத்தரப்பினர் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் கல்வியைச் சீர்குலைப்பதற்காக புலிகள் மேற்கொண்ட நடவடிக்கைகளில் இச் சம்பவமும் ஒன்று என படைத்தரப்பின் செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (1)

## பத்திரிகையாளரிடம் குற்றப்புலனாய்வு பிரிவு நேரடி விசாரணை

அச்சுறுத்தல் காரணமாகவே பொது முயற்சிகள், நிதிப்பொறுப்புகள் குழுவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜயதாஸ ராஜபக்ஷ நாட்டை விட்டு வெளியேறினார்.

இவ்வாறு லக்பிம பத்திரிகையில் வெளிவந்த செய்தி தொடர்பாக பத்திரிகையாளர் லசந்த வீரகுலசூரியவிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

நேற்று லக்பிம பத்திரிகை காரியாலயத்துக்கு சென்ற குற்றப்புலனாய்வுத் துறைப் பொலிஸார் இந்த விசாரணையை மேற்கொண்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# வவுனியாவில் பதற்றம்!

## எல்லையோர மக்கள் அச்சத்தால் இடம்பெயர்வு கண்காணிப்புக் குழுவின் பிரசன்னமும் இல்லை

கொழும்பு, பெப்ரவரி 24

**தாக்குதல் நடக்கக்கூடும் என்ற அச்சம் காரணமாக வவுனியாவில் கடந்த சில தினங்களாக ஒருவித பதற்றநிலை தோன்றியுள்ளது. அங்கு இரு தரப்புக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களின் எல்லையில் வசிக்கும் மக்கள் இதனால் பாதுகாப்பான பகுதிகளை நோக்கி இடம்பெயர்ந்து வருகின்றனர்.**

**வவுனியாவில் இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரசன்னமும் வாபஸ் பெறப்பட்டிருப்பதாக அதன் பேச்சாளர் தெரிவித்திருக்கிறார்.**

அரசுப்படைகளினதும் விடுதலைப் புலிகளினதும் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களின் எல்லைப் பகுதியை அண்டியிருக்கும் கிராமங்களில் வசிக்கும் மக்களே தமது இருப்பிடங்களை விட்டு பாதுகாப்புக் கருதி இடம்பெயரத் தொடங்கியிருக்கின்றனர். விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் வசிக்கும் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் காட்டுப் பாதைகள் வழியே அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வரத்தொடங்கியுள்ளனர் என்று இராணுவத்தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

ஓமந்தை முன்னரங்கை அண்டி பெரும்

(04 ஆம் பக்கம் பார்க்க)

## நாகர்கோயில், முகமாலை பகுதிகளில் ஷெல் தாக்குதல்

நெல்லியடி, பெப்.24

நாகர்கோயில், முகமாலை முன்னரங்க நிலைகளில் நேற்றுமாலை ஷெல் தாக்குதல்கள் இடம்பெற்றன.

நேற்றுக்காலையும் மாலையும் அந்தப் பகுதிகளில் ஷெல் தாக்குதல்கள் இடம்பெற்றன.

இத்தாக்குதல்களின்போது ஏற்பட்ட சேத விவரம் நேற்றிரவுவரை தெரியவரவில்லை. (அ-1-115)

## கற்பிட்டிக் கடலில் தேடுதல்

கற்பிட்டி, பெப். 24

கற்பிட்டி - பத்தனைக்குண்டு - வட கடற்பரப்பில் கடற்படையினர் நேற்றுத் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இந்தக் கடற்பகுதியில் கடற்படையினர் நேற்றுமுன்தினம் மேற்கொண்ட தாக்குதலில் சந்தேகத்துக்கிடமான இரண்டு படகுகள் அழிக்கப்பட்டன. அதில் பயணஞ்செய்த 9பேர் உயிரிழந்துள்ளனர் என்று கடற்படையினர் தெரிவித்திருக்கின்றனர். இந்தச் சம்பவத்தின் எதிரொலியாகவே இந்தத் தேடுதல் நடத்தப்பட்டது எனக் கடற்படையி

(04 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர்கள் தனியரசு அமைக்க உதவுங்கள்

## சர்வதேச சமூகத்திடம் கோருகிறது கூட்டமைப்பு

### ஸ்ரீலங்கா அரசு நீதிவழங்க மறுப்பதால் வேறுவழி எதுவுமில்லை என்று சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப்ரவரி 24

**தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டத்தினை அங்கீகரித்து, அதன் பிறப்புரிமையான சுயநிர்ணய அடிப்படையில் தமக்கெனத் தனியரசை அமைப்பதற்கு அனைத்து உதவிகளையும் நல்குமாறு சர்வதேச சமூகத்திடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.**

**ஸ்ரீலங்கா அரசினால் தமிழ் மக்களுக்கு நீதி மறுக்கப்பட்டிருக்கும் நிலையில், இதனைத் தவிர வேறு வழி கிடையாது என்பதனையும் கூட்டமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.**

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி ஐந்து வருடங்கள் பூர்த்தியானதையொட்டி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

அந்த அறிக்கையிலேயே மேற்கண்ட கோரிக்கையைக் கூட்டமைப்பு சர்வதேச சமூகத்திடம் விடுத்திருக்கிறது.

கூட்டமைப்பின் அறிக்கை விவரம் வருமாறு:-

இலங்கைத்தீவில் ஸ்ரீலங்கா அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு ஐந்து ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன.

இக்காலப் பகுதியில் நீண்ட கால யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் உடனடி மனிதாபிமானப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கோ அல்லது நீண்ட கால அரசியல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கோ ஆக்கபூர்வமான எந்த நடவடிக்கைகளையும் சிங்கள அரசு மேற்கொள்ளவில்லை என்பது மட்டுமல்ல மக்கள் மரண பயமின்றி வாழக்கூட வழி விடவில்லை.

(04 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் குறிப்பிட்ட நேரங்களில் சில வீதிகளில் போக்குவரத்தைத் தவிர்க்கப் படையினர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், பெப்.24

குடாநாட்டில் ஏ-9 வீதியையும் மற்றும் பிரதான வீதிகளையும் போக்குவரத்துக்குப் பயன்படுத்துவதைக் குறிப்பிட்ட நேரங்களில் தவிர்த்துக் கொள்ளுமாறு பலாலிப் படைத் தலைமையகம் பொதுமக்களைக் கேட்டுள்ளது.

மக்கள் தமது அன்றாடத் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு காலை 10 மணியில் இருந்து நண்பகல் 12 மணிவரையும் -

பிற்பகல் 3 மணியில் இருந்து 4.30 மணிவரையும் -

ஏ-9 வீதியையும் ஏனைய பிரதான வீதிகளையும் தவிர்த்து பயணங்களை மக்கள் மேற்கொள்ளுமாறு பலாலி பாதுகாப்புத் தலைமையகம்

(04 ஆம் பக்கம் பார்க்க)

## ஒற்றை ஆட்சியை விட்டு சமஷ்டி வழியில் தீர்வுகாண ஜனாதிபதி முயற்சிக்கின்றார்

### நாடாளுமன்றத்தில் டிலான் பெரேரா தெரிவிப்பு

கொழும்பு, பெப். 24

ஒற்றை ஆட்சி மற்றும் ஐக்கிய ராஜ்யம் என்ற கொள்கைகளில் இருந்து விடுபட்டு சமஷ்டி மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முயற்சி செய்து வருகிறார் என்று அமைச்சர் டிலான் பெரேரா கூறினார்.

நேற்று நாடாளுமன்றில் இடம்பெற்ற அமரர் ரவிராஜுக்கு அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

நல்லதொரு ஜனநாயகவாதியான ரவி

(04 ஆம் பக்கம் பார்க்க)

## நிர்ணயித்த விலையை விட கூடுதல் விலைக்கு விற்றால் வர்த்தக நிலையத்தில் உள்ள சகல பொருள்களும் பறிமுதல்

### வர்த்தகர்களுக்கு யாழ். நீதிவான் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், பெப்.24

அரச அதிபர் நிர்ணயம் செய்த விலைகளை விட அதிக விலைக்கு அத்தியாவசியப் பொருள்களை விற்பனை செய்யும் வர்த்தகர்களின் கடைகளில் உள்ள சகல பொருள்களும் பறிமுதல் செய்யப்படும்.

யாழ். நீதிவான் இ.த.விக்னராஜா இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

யாழ். அரச அதிபரால் விநியோகம் செய்யப்பட்ட அத்தியாவசியப் பொருள்களை கூடுதல் விலைக்கு விற்பனை செய்தனர் என்ற குற்றச்சாட்டில் ஆறு வர்த்தகர்கள் விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகளால் யாழ். நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் செய்யப்பட்டனர்.

அது தொடர்பான வழக்கு விசாரணையின்போதே [illegible] கடும் எச்சரிக்கை விடுத்தார்.

இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட ஆறு வர்த்தகர்களுக்கும் 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததோடு கடும் எச்சரிக்கையும் விடுத்தார்.

சகல வர்த்தக நிலையங்களிலும் விலைப் பட்டியல் பார்வைக்கு வைக்கப்பட வேண்டும். பொருள்களை விற்பனை செய்யும் [illegible]ட்டு வழங்கவேண்டும்.

(04 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்குப் பல்கலை கிளைமோர் தாக்குதல்: 16 பேர் தொடர்ந்து விசாரணை

கொழும்பு, பெப்.24.

கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கு அருகில் அண்மையில் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதல் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டுள்ள 16 பேர் தொடர்ந்தும் பொலிஸாரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ள சிலரை விடுவிப்பது குறித்து பாதுகாப்புப்

(04 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தேசிய பாடசாலைகளுக்கு பட்டதாரிகள் தெரிவு செய்யப்படுவர்

அச்சுவேலி, பெப்.24

தேசிய பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு பட்டதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. போட்டிப் பரீட்சை மூலம் ஆயிரத்து 500 ஆசிரியர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் ஆசிரியர் பதவி வெற்றிடங்கள் நிரப்புவதற்கான ஏற்பாடுகள் கல்வி அமைச்சினால் செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பான விவரங்கள் இம்மாதம் 19 ஆம் திகதி திங்கட்கிழமை வர்த்தமானியில் வெளியாகிஉள்ளன.

பட்டதாரிகள் பரீட்சைத்திணைக்கள ஆணையாளர் நாயகத்தின் பெயருக்கு வருமானத் தலைப்பு 4000 -20-07-20-13 இலக்கத்தில் 250 ரூபா செலுத்தி மாவட்ட செயலகம் அல்லது பிரதேச செயலகங்களில் அதற்கான பற்றுச்சீட்டைப் பெற்று இணைத்து விண்ணப்பங்களை மார்ச் 7 ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

போட்டிப் பரீட்சையில் உயர்புள்ளி பெறுபவர்கள் ஆசிரியர்களாக நியமிக்கப்படவுள்ளனர்.

வர்த்தமானிஅறிவித்தலை உதயன் பணிமனையின் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். (1-11)

## வெளிவாரிப் பிரிவு பரீட்சைப் பெறுபேறு

யாழ்ப்பாணம், பெப். 24

யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பதிவுகள் பரீட்சை அலகினால் கடந்த ஆண்டு நடத்தப்பட்ட கலைமாணி பகுதி 1 பரீட்சைப் பெறுபேறுகள் கடந்த செவ்வாய்க்கிழமை வெளியாகியுள்ளன.

மாணவர்கள் தமது பெறுபேறுகளை வெளிவாரிப் பிரிவுடன் தொடர்பு கொண்டு பார்வையிடலாம் என்று உதவிப்பதிவாளர் எஸ். கே.பிரபாகர் தெரிவித்துள்ளார். (1-203)

## 47 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

திருமதி
**ஆனந்தரூபா நிரஞ்ஜனி**

மலர்வு :- 06-03-1973
உதிர்வு :- 10-01-2007

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு ஆறுதல் கூறியோருக்கும், அனுதாபச் செய்திகளை அனுப்பியோருக்கும், மற்றும் சகல வழிகளிலும் உதவியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன், நாளை(25.02.2007) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அழைக்கிறோம்.

தயவு செய்து இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

47, கடவைப்புலம்,
சுன்னாகம்.
தொ.பே :- 077 6220115 (57913) குடும்பத்தினர்.

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**கந்தையா தவரத்தினம்**




தோற்றம் 05-01-1955 மறைவு 28-02-2004

திதி: 24-02-2007

மூன்றாண்டு என்ன ஓராயிரம் ஆண்டுகள்
சென்றாலும் உங்கள் நினைவு
எம்மை விட்டு நீங்காது!

புகையிரத வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (58387) -குடும்பத்தினர்.

## 36ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னையின் மடியில் 05 . 09 . 1925
ஆண்டவன் அடியில் 20 . 01 . 2007

**கலாபூஷணம் சுப்பிரமணியம் நவசிவாயம்**

(இளைப்பாறிய இசை ஆசிரியர், கருகம்பனை)

கலாபூஷணம் விருதேந்திய இசைவேந்தாய் இம்மண்ணில்
உலாவினீர்கள் உவகையுடன் உறவினர் நாம் பெருமையுற;
வேலாயுதனின்திருவடியில் விருப்புடனே இணைந்திட்டீர்கள்

பத்தாவத்தை,
இளவாலை. (58404)
உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
உற்றார், உறவினர்கள்.

## வருடாந்தப் பெருந்திருவிழா

யாழ்ப்பாணம், பெப். 24

வண்ணை - கன்னாதிட்டி காளியம்மன் தேவஸ்தான வருடாந்த பெருந்திருவிழா நேற்றுமுன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

தொடர்ந்து பத்துத் தினங்கள் இடம்பெறும் உற்சவத்தில் எதிர்வரும் 2ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெறும். (1)

## வடமராட்சியைச் சேர்ந்தவர் திருமலையில் வெட்டிக்கொலை

உடுப்பிட்டி,பெப்.24

வடமராட்சியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் பட்டப் பகலில்.திருமலையில் வெட்டிக்கொலை செய்யப்பட்டார்.

வடமராட்சி வதிரி மேற்கைச் சேர்ந்த கதிரவேலு பரமானந்தன் (வயது 57) என்னும் இரு பிள்ளைகளின் தந்தையே கடந்த புதன்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் திருமலை அநுராதபுர வீதியில் வைத்து இனந்தெரியாதவர்களால் வெட்டிக் கொல்லப்பட்டவராவார்.

திருமலை தோப்பூர் பகுதியில் வசித்து வரும் இவர் ஓய்வுபெற்ற அரச வங்கி காவலராவார்.

இவர் தமது நண்பர் ஒருவருடன் செல்வபுரத்துக்கு செல்வதாகக் கூறிச் சென்றார் என்றும் அநுராதபுரம் வீதியில் இருவரும் வெட்டப்பட்ட நிலையில் காணப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. இருவரும் திருமலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். பரமானந்தன் அங்கு மரணமானார். (அ-155)


## விற்பனைக்கு

சிறிலங்கா ரெலிகொம்மிற்குச் சொந்தமான 02122255XX இலக்கமுடைய ரெலிபோன் லைன், P4 கொம்பியூட்டர் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: 0773500347

## Organ/ Violin Notes

Organ, வயலின், Guitar, வீணை, புல்லாங்குழல் போன்ற இசைக்கருவிகளுக்கான 250 சினிமாப் பாடல்களின் இசைக்குறிப்புகள், கேள்விஞானம், Organ Exercise, Theory ஆகியன விற்பனைக்குண்டு. புதிய வகுப்புகள் பிரதி சனிக்கிழமை தோறும் ஆரம்பமாகும். சகல இசைக் கருவிகள் வாங்குவதற்கும் விற்பதற்கும்.

**சுரவீணா இசை மன்றம்**
131, கோயில் வீதி, நல்லூர்.
தொ.பே.: 0713055991, 0777031293
(நல்லூர் ஆலயத்திலிருந்து 500 மீற்றர் தெற்கே)

## ICT Information & Communication Technology
## GRADE-10-11 (2007)

2007 ஆம் ஆண்டு தரம்10,11ல் கணினியை ஒரு பாடமாக எடுக்கும் மாணவர்களுக்கான விசேட கணினிப்பிரிவுகள் ஆரம்பம்.
மேலதிக விபரங்களுக்கு நேரில்!

**CB Computer Academy**
T.P No 0214590291 Station Road, Kondavil.

## இந்தியாவில் கல்வி கற்கும் வாய்ப்பு
பிருந்தாவன் கல்லூரி
பெங்களூர் பல்கலைக் கழகத்துடன் இணைந்தது

கல்வி நெறிகள்: B.Sc. B.B.M. B.C.A. B.Com.

அடிப்படைத் தகைமை க.பொ.த (உ/தரம்) 2 பாடங்களில் சித்தி
பதிவுகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன

**Company Secretarial Services(Pvt.)Ltd.**
285C-1/1 Stanley Tillakaratne Mawatha, Nugegoda.
மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ளவும்
தொலைபேசி இலக்கம் - 0777 317043

புதிய கிளை நிறுவனத்துடன் நாம்...!
**COMPUTER EXPRESS**
ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

Jaffna Head office: No 15, Brambiyadi Lane (off Stanly Rd.) 021-222 8258, 0777 222422
Branch office: No 167, Kasthuriyar Rd. (Near Uthayan Publication) Jaffna.

**Diploma in Hardware Engineering**
Assembling, Upgrading, Troubleshooting, Fault Finding, Repairing, Servicing, Software installation, Configuring, Networking Etc.
Course Fee 2000/=

**Diploma in Computerized Accounting**
ACCPAC + Quick Books Premier + MYOB ஆகிய முன்னணி Accounting Software களினூடாக கற்பிக்கப்படும்.
Course Fee :3500/=

**Diploma in Video Mixing**
Introduction to Computer, Operating System(Win XP), Internet & email, Adobe Photoshop, Adobe Premier, Cool3D Studio, Pinnacle Studio, VCD Cutter
Course Fee :3000/=

**Diploma in Graphic Designing**
Introduction to Computer, Operating System(Win XP), Internet & email, Adobe Photoshop, Corel Draw, Cool3D Studio, Macromedia Flash MX
Course Fee :2000/=

ஒரே நாளில் ஆரம்பம்:- 26/02/2007-09.00 AM

ஏனைய அனைத்துக் கற்கைநெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றது.
Batch I : 23/02/2007
Batch II : 24/02/2007
Batch III : 25/02/2007
Batch VI : 28/02/2007


## புண்ணிய நாச்சியார் தின நிகழ்வு

யாழ். சைவ பரிபாலன சபை நடத்தும் புண்ணிய நாச்சியம்மையார் தின நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் ஆறுமுகம் ஸ்ரீஸ்கந்தமூர்த்தி கலந்து கொள்வார். (1-202)


## விற்பனைக்கு

Monitor, Casing ஏனைய கணனி உபகரணங்கள் விற்பனைக்குண்டு.
24.02, 25.02.2007 ஆம் திகதிகளில் பார்வையிடலாம்
தொடர்பு: 44/3A, மணல்தறை லேன், கந்தர்மடம்.

**ENGLISH MEDIUM CLASSES**
GRADES : 06, 07
COMMENCE ON: 24th Feb. 2007 SATURDAY
ENROL EARLY
- Director
The Express Institute
Irupalai, Kopay.

## சிறு விமான சேவை

யாழ்.-கொழும்பு-யாழ். விமான சேவைகள்
தனியார் நிறுவனத்தின் நான்குபேர் பயணிக்கத்தக்க சிறு விமான சேவை உத்தரவாதத்துடன் நடைபெறுகின்றது.
தொடர்புகளுக்கு:
RAINBOW TRAVELS & TOURS
32 1/2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.
021 222 3237
0115371630, 0777535988 (கொழும்பு)
(58419)


## அகவை 10 இல் இணுவில் கிழக்கு இளைஞர் கழக ஆண்டு விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் 2006

* தலைவர் : ம.கோபீஸ்கண்ணா
* காலம் : 25.02.2007 ஞாயிற்றுக்கிழமை
* நேரம் : மு.ப. 9.15 மணி
* இடம் : இணுவில் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபம்
* பிரதம விருந்தினர் : அ.சதானந்தன் (அதிபர், யா/இணுவில் மத்திய கல்லூரி)
* சிறப்பு விருந்தினர்கள் : சி.சிவதெட்சணாமூர்த்தி (உதவி இயக்குநர், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், யாழ். மாவட்டம்)
  அ.சத்திவேல் (மாவட்ட இளைஞர் சேவை அலுவலர்)
  க.கணபதிப்பிள்ளை (இளைஞர் சேவை அலுவலர், வலி.தெற்கு)
* பரிசில் வழங்கல்
  - பல்கலைக்கழக மாணவர்களுக்கான புலமைப் பரிசில்கள்
  - ஆங்கில பயிற்சி நெறிக்கான சான்றிதழ்கள்
  - கணனி பயிற்சி நெறிக்கான சான்றிதழ்கள்
  - மற்றும் சிறப்புப் பரிசில்கள்
  - முன்னைய காலங்களில் நடத்தப்பெற்ற பயற்சி நெறிக்கான சான்றிதழ் பெறாதவர்களும் இத்தினத்தில் சான்றுதல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இணுவில் கிழக்கு,
இளந்தாரி கோயிலடி. (58420)
இணுவில் கிழக்கு
இளைஞர் கழகம்.

## மரண அறிவித்தல்கள்

### சிவசிதம்பரம் சத்தியதேவன்

(ஓய்வுபெற்ற தொழிற்கந்தோர் உத்தியோகத்தர்)



வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் மல்லாகத்தை வசிப்பிடமாகவும் தற்போது கூழாவடி, ஆனைக்கோட்டையில் வசித்தவருமாகிய சிவசிதம்பரம் சத்தியதேவன் நேற்று (23.02.2007) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர்களான சிவசிதம்பரம் - தையலேஸ்வரின் செல்வப் புதல்வனும் ருக்மணியின் கணவரும் ரூபராணி, ஜெயராணி, நளினி(கனடா), யோகா சத்தியதேவன், சுபாயினி ஆகியோரின் தந்தையும் கனகரட்ணம், காலஞ்சென்ற இராசதுரை மற்றும் செல்வேந்திரராஜா(ஜேர்மனி) வாசுகி, நவலிங்கம் ஆகியோரின் மாமனாரும் மயூரன், பகீரதி, ஜெயராசன், நிருபராசன், பீரதீபராசன், (அமிஷா, அமிரா, அனிஸ்ரா - கனடா), சிந்துஜன், மீனலோஜினி, நிசாந்தினி, கலாறஞ்சினி, யூக்கிரிஸ்ரி ஜெனி, சிறீமோகனமூர்த்தி ஆகியோரின் பேரனும் கவிதா, மகிந்தன், விஷ்ணுப்பிரியா, துஷ்ஜந்தினி, கிருஷ்காண் ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை(25.02.2007) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு நடைபெற்று பூதவுடல் உடுவில் சேமக் காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கூழாவடி,
ஆனைக்கோட்டை. (58421)
தகவல்:
S.ருக்மணி(மனைவி).

### வேலுப்பிள்ளை சின்னையா

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் தற்பொழுது இலந்தைக்குளம் வீதி, கொழும்புத்துறையில் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சின்னையா காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சுப்பையா - ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவரான அன்னபாக்கியத்தின் அன்புக் கணவரும் சச்சிதானந்தன், திருநாவுக்கரசு , லீலாவதி, சண்முகநாதன்(பாப்பா), காலஞ்சென்ற மஞ்சுளாதேவி, இந்திராணி, புஸ்பராணி, சாந்தினிதேவி, ஜீவானந்தன், ரதிதேவி(ரதி), பாஸ்கரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் விமலா, விஜயா, காலஞ்சென்ற ராஜலிங்கம், அகிலத்திருநாயகி, காலஞ்சென்ற தனபாலசிங்கம், நவரட்ணராஜா, சிவா, சிவலோகநாதன்(துரை), ரஜனி ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.02.2007) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

41/4, இலந்தைக் குளம் வீதி,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். (58422)
தகவல்:
சிவலோநாதன் (துரை- மருமகன்),
ரதி (மகள்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொ.பே., 222 3837, 222 9933 தொ.நு.: 222 9944

## குற்றச்சாட்டு விரல் சர்வதேச சமூகத்தை நோக்கி....!

இலங்கைத்தீவில் இன்று பெரும் சர்ச்சையைக் கிளப்பியிருக்கும் யுத்தநிறுத்த ஒப்பந்தம் செயலிழந்து, செல்லரித்து, வெறும் உக்கிப்போன காகிதத்தில் - எழுத்தில் - மட்டுமே இருக்கையில், அதன் ஐந்து வருட ஆயுட்காலம் கடந்திருக்கின்றது.

இந்தச் சமயத்தில் இந்த ஒப்பந்தத்தின் நிலையை மதிப்பீடு செய்யும் வகையில் ஒப்பந்தத்தின் ஒரு தரப்பான தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்திருக்கும் அறிக்கையானது, இலங்கை விவகாரத்தில் சர்வதேச சமூகத்தைக் குற்றவாளிக்கூண்டில் நிறுத்தியிருக்கின்றது.

இலங்கை அமைதி முயற்சிகளைச் சீகுலைக்கும் வகையில் சர்வதேச சமூகம் பக்கச் சார்பாகவும், பொறுப்பற்றும் நடந்துகொள்வதன் மூலம் பெரும் தவறிழைத்து வருவதை இப்பத்தியில் அவ்வப்போது தவறாது சுட்டிக்காட்டி வந்தோம். அதுவே விளக்கமாகவும் விவரமாகவும் இப்போது இந்த ஒப்பந்தம் பற்றிய புலிகளின் மதிப்பாய்வு அறிக்கையில் அம்பலப்படுத்தப்பட்டிருக்கின்றது எனலாம்.

இலங்கை நிலைமை இன்று இந்தளவு மோசமான கட்டத்தை அடைந்திருப்பதற்கு யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் நேரடியாக சம்பந்தப்பட்ட தரப்புகள் இரண்டுக்கும் அப்பால், மூன்றாவது தரப்பான சர்வதேச சமூகத்தின் தவறிழைப்பும் முக்கிய காரணம் என்று குற்றம் சுமத்தப்படுவது கவனிக்கப்பட வேண்டிய அம்சமாகும்.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் ஒப்பமிட்டாலும்கூட, சர்வதேச சமூகத்தின் பிரசன்னத்தில் - அதன் அதீத பங்குபற்றுதல் மற்றும் ஈடுபாட்டுடன் - அது மேற்கொள்ளப்பட்டதால்தான் அதற்கு முக்கியத்துவமும், உயிர்ப்பும், சிறப்பும் கிடைத்தன. சர்வதேச சமூகத்தின் பார்வையில் அது முன்னெடுக்கப்பட்டதாலேயே, அதுவரை அமைதி முயற்சிகளில் வஞ்சகத்தனமாக ஏமாற்றப்பட்ட தமிழ் மக்கள் இம்முறை இந்த ஒப்பந்தத்திலும் அதை ஒட்டிய அமைதி முயற்சிகளிலும் அதிகளவு நம்பிக்கை வைத்தனர். ஆனால், சிங்கள தேசத்தின் வழமையான - கபடத்தனமாக - திமிர்ப்போக்குடைய - பேரினவாத மேலாண்மையால் இம்முறையும் ஏமாற்றப்பட்ட தமிழ் மக்கள், அதேவேளை சர்வதேச சமூகத்தினாலும் இம்முறை வஞ்சிக்கப்பட்டிருக்கின்றார்கள். அதுவே இப்போது வேதனையாக வெளிப்படுகின்றது.

இந்த ஒப்பந்தம் இவ்வாறு சீரழிந்து போவதற்குக் காரணமாக அமைந்த சர்வதேச சமூகத்தின் நடவடிக்கைகளை மூன்று வகையாகத் தமிழர்கள் பட்டியலிடுகின்றார்கள்.

- ஒப்பந்தத்துக்குப் பின்னணியாக அமைந்த நியாயங்களையும் அடிப்படைகளையும் சர்வதேச சமூகம் புரிந்துகொள்ள மறுத்தமை - மறந்தமை.
- பக்கச் சார்பாக நடந்து ஒப்பந்தத்தைப் பலவீனப்படுத்தியமை.
- ஆக்கபூர்வமாகவும் நீதியாகவும் செயற்படவேண்டிய தனது கடமையிலிருந்து சர்வதேச சமூகம் தவறியமை.

இலங்கையில் இனப்போர் பெரும் யுத்தமாக வெடிக்கவும், பின்னர் அதன் ஒரு கட்டமாக யுத்த நிறுத்த ஒப்பந்தம் பிறக்கவும் காரணமாக சில பின்னணிகள் இருந்தன. அவையே இந்த ஒப்பந்தத்துக்கு அடிப்படையாகவும் மூலாதாரங்களாகவும் அமைந்தன.

தமிழர் தாயக மக்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு. அதற்காகவே அவர்கள் போராட்டம் நடத்துகின்றார்கள். தமிழர் தாயகத்தில் ஒரு தனித்துவமான அரசுக்கட்டமைப்பு ஏற்கனவே நிறுவப்பட்டுள்ளது. அந்தக்கட்டமைப்பே இலங்கைத்தீவின் அரசுடன் சம அந்தஸ்து நிலையில் நின்றுகொண்டு இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது. இந்த உடன்படிக்கை நிலைத்து, நின்று, நீடிக்க வேண்டுமானால், ஒப்பந்தம் செய்த தரப்புகளிடையே சம அந்தஸ்துத் தரமும் ஆயுதச் சமவலு நிலையும் தொடர்ந்து பேணப்படவேண்டும். - இவ்வாறு இந்த ஒப்பந்தத்தின் ஆணி வேர்களாக இருந்த நியாயங்களையும் சர்வதேச சமூகம் புரிந்து கொள்ள மறுத்துச் செயற்பட்டது.

ஒப்பந்தம் செய்யப்பட்ட பின்னர் அதில் சம்பந்தப்பட்ட ஒரு பிரதான தரப்பை பயங்கரவாத முத்திரை குத்தி, தரம் இறக்க முயன்றதன் மூலம், ஒப்பந்தத்துக்கு அடிப்படையாக இருந்த இரு தரப்பு சம அந்தஸ்து என்ற நிலையை மோசமாகப் பாதிப்புறச் செய்தது சர்வதேச சமூகமே ஆகும். அதேவேளை ஒப்பந்தம் தாக்குப் பிடிப்பதற்கு பிரதான அம்சமாக இருந்த 'ஆயுதப் படை வலுச்சமநிலை' என்ற தேவையை உணர மறந்து - மறுத்து - செயற்பட்டது சர்வதேச சமூகம். - இந்தப் போக்கினால், பக்கச்சார்பாக நடந்து ஒப்பந்தத்தைப் பலவீனப்படுத்தியது.

அமைதிவழித் தீர்வில் ஆர்வம் உள்ளது போல உலகுக்குக் காட்டிக்கொண்டு, இராணுவ முனைப்பில் தீவிரமாக இருக்கின்றது தென்னிலங்கை அரசு. அதனைத் தடுத்து நிறுத்தும் வகையில் உரிய அழுத்தங்களைக் கொடுப்பதற்கோ, ஆக்கபூர்வமான எதிர் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கோ தவறி, விருப்பமின்றி செயற்படுகின்றது சர்வதேச சமூகம்.

ஒப்பந்தத்தின் ஒரு தரப்பினரான புலிகளைப் பயங்கரவாத முத்திரை குத்தி அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதில் விவேகம் இழந்து, வேகமும் சிரத்தையும் காட்டிய சர்வதேச சமூகம், இலங்கை அரசின் இராணுவ முனைப்புப் போக்கைக் கண்டித்து, தண்டித்து, தடுத்து நிறுத்துவதில் வேகம் இழந்து அசிரத்தையாக நடந்து கொண்டது. நியாயமாக நடந்து கொள்ளவில்லை. இதன்மூலம், ஆக்கபூர்வமாகவும், நீதியாகவும் செயற்பட வேண்டிய தனது கடமையிலிருந்து அது தவறியுள்ளது.

சர்வதேச சமூகத்தின் மீதான இந்தக்குற்றச்சாட்டுக்களை - அவற்றின் பிரசன்னத்தில் இந்த யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட இரு தரப்புகளில் ஒன்றே பகிரங்கமாக முன்வைத்திருக்கின்றது.

ஒப்பந்தம் குறித்தும், அதை முழு அளவில் நடைமுறைப்படுத்த வேண்டிய அவசியம் பற்றியும் தவறாது நியாயம் பிளக்கும் சர்வதேச சமூகத்தை நோக்கி, ஒப்பந்த தரப்புகளில் ஒன்றே இவ்வாறு வெட்டவெளிச்சமாக குற்றம் சுமத்தியிருக்கின்றது. நீதிபதி ஸ்தானத்தில் இருக்கவேண்டிய உலக சமூகத்தின் மீதே குற்றச்சாட்டு விரல் நீண்டிருக்கிறது.

இவ்விடயத்தில் பதிலளிக்கவும், தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தவும், அவசியப்பட்டால் தன்னைத் திருத்திக் கொள்ளவும் சர்வதேச சமூகத்துக்கு தட்டிக்கழித்து உதாசீனப்படுத்த முடியாத பொறுப்பும், கடமையும் உள்ளன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

# குடாநாட்டில் குற்றச்செயல்களைத் தடுக்க நீதிமன்றங்களும் பங்களித்து வருகின்றன

### செஞ்சிலுவை சர்வதேசப் பிரதிநிதிகளிடம் யாழ். நீதிபதி

யாழ்ப்பாணம், பெப். 24

குடாநாட்டில் பெருகிவரும் கொலை, கொள்ளை, ஆள்கடத்தல் மற்றும் மனித உரிமை மீறல்களை குறைத்துத் தடுப்பதில் குடாநாட்டில் உள்ள நீதிமன்றங்களும் தமக் குரிய பங்களிப்பை நல்கி வருகின்றன.

இவ்வாறு யாழ். மாவட்ட நீதிபதி இ.த. விக்னராஜா, செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் யாழ். மாவட்டப் பிரதிநிதியிடம் எடுத்துரைத்தார்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் மாவட்டப் பிரதிநிதியாகப் புதிதாகப் பதவியேற்றுள்ள மரிக்கோ குஷிமா நேற்று நீதிபதியைச் சந்தித்துப் பேசினார். அவருடன் செஞ்சிலுவைக் குழுவின் ஜெனிவா தலைமையகத்தைச் சேர்ந்த சட்ட ஆலோசகர் ஜோர்டியுலா ரோகியும் உடனிருந்தார்.

ஆள்கடத்தல், காணாமற்போதல், கொலை, கொள்ளை ஆகியன பெருகி வரும் நிலையில் அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்து இருவரும் கேட்டறிந்தனர்.

- பெருகிவரும் கொலைகள், கொள்ளைகள், ஆள்கடத்தல்களை கட்டுப்பத்தும் பொருட்டு கிராம சேவகர்கள் பிரிவுதோறும் விழிப்புக் குழுக்களை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

- இரவு நேரங்களில் நடைபெறும் கொள்ளைகளைத் தடுப்பதற்கு இராணுவத் தரப்பும் பொலிஸாரும் இணைந்து செயற்படும் திட்டம் ஒன்றும் நடைமுறையில் உள்ளது.

- உயிர் அச்சம் காரணமாக மனித உரிமை ஆணைக்குழுவில் சரண் அடைவோரை குடாநாட்டிலேயே தங்க வைப்பதற்காக தெல்லிப்பழையில் உள்ள புனர்வாழ்வு நிலையத்தை மீள இயக்குவது குறித்தும் பிரதம நீதியரசரின் உத்தரவின் பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

- புனர்வாழ்வு நிலையத்தை குடாநாட்டில் அமைப்பதன் மூலமே சரணடைவோரின் உறவினர்கள் சந்திப்பதற்கும் வசதியாக இருக்கும் -

என்பன குறித்து செஞ்சிலுவை சர்வதேசக் குழு அதிகாரிகளிடம் நீதிபதி விக்னராஜா விரிவாக எடுத்துக் கூறினார். (அ)

**கடந்த மோத காலத்தில்**

## 26,000 உணவுப் பொதிகள் தபால் மூலம் குடாநாட்டுக்கு

நல்லூர், பெப்.24

கடந்த ஓகஸ்ட் 11ஆம் திகதிக்குப் பின்னர் உருவான அசாதாரண சூழ்நிலை காலத்தில், வெளி மாவட்டத்தில் உள்ளவர்கள் குடாநாட்டிலுள்ள தமது உறவினர்களுக்கு 26, 000இற்கும் அதிகமான உணவுப் பொருள்கள் அடங்கிய தபால் பொதிகளை அனுப்பி உள்ளனர். யாழ். பிரதம தபாலக வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன.

யாழ். நகரப் பகுதிக்கு 11,000 உணவுப் பொருள்கள் அடங்கிய பொதிகளும் ஏனைய இடங்களுக்கு 15,000இற்கும் அதிகமான பொதிகளும் வந்து சேர்ந்தன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

குடாநாட்டிற்கு எடுத்து வருவதற்கென 5,000 தபால் பொதிகள் திருகோணமலையில் தேங்கியுள்ளன என்றும் அறியவந்தது. (1-202-111)

## முக்கிய பிரதான வீதிகளில் நேற்றும் போக்குவரத்துத் தடை; மக்கள் சிரமம்

யாழ்ப்பாணம், பெப். 24

குடாநாட்டில் முக்கிய வீதிகளில் பொதுமக்களின் போக்குவரத்துக்கு விதிக்கப்படும் தடை தொடர்ந்த வண்ணமுள்ளதால் அவர்கள் தமது அன்றாட அலுவல்களைத் திட்டமிட்டவாறு செய்யமுடியாமல் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தினமும் காலை வேளையிலும் மாலை வேளையிலும் பலாலிவீதி, ஏ-9 கண்டி வீதி ஆகியன போக்குவரத்துக்கு பல மணிநேரம் தடை செய்யப் படுகின்றன. இது தொடர்பாக யாழ். நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா யாழ். மாவட்டப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறிக்குத் தெரியப்படுத்தியிருந்தார். இதனையடுத்து பொதுமக்களின் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படாத வகையில் அதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதாக படைத் தளபதி நீதிவானிடம் நேற்று முன்தினம் உறுதியளித்திருந்தார்.

ஆயினும் நேற்றுக் காலையிலும் மாலையிலும் பல மணிநேரம் ஏற்படுத்தப்பட்ட வீதித்தடை காரணமாக மக்கள் பெரும் எண்ணிக்கையில் வீதிகளுக்கு அப்பால் காத்து நிற்பதை அவதானிக்க முடிந்தது. (அ-8)

### யாழ்.நகரில் அப்பிள், தோடம்பழங்கள்

யாழ்.நகரப் பகுதியில் உள்ள பழக்கடைகளில் நீண்ட நாள்களின் பின் அப்பிள் பழங்களையும் தோடம்பழங்களையும் காணக்கூடியதாக இருந்தது.

மிகவும் குறைந்த அளவில் விமானம் மூலம் வந்து சேர்ந்த இப் பழங்கள் ஒவ்வொன்றும் தலா 100 ரூபாவுக்கு அதிகமாக விற்கப்பட்டது. (111)

## செஞ்சிலுவைச் சங்க ஏற்பாட்டில் 24மணிநேர அம்புலன்ஸ் சேவை

வடமராட்சி தவிர்ந்த குடாநாட்டின் ஏனைய பகுதிகளுக்கான 24மணிநேர அம்புலன்ஸ் சேவையை செஞ்சிலுவைச்சங்க யாழ்.கிளை நடத்தி வருகின்றது.

அம்புலன்ஸ் சேவை தேவைப்படுவோர் 222 2561, 222 9792 என்னும் இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பிட்ட அம்புலன்ஸ் சேவை சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினருடன் இணைந்து மேற்கொள்ளப்படுவதாகவும் -

அந்தப்படையின் தொலைபேசி இலக்கங்களான 222 5594, 222 3116 உடனும் தொடர்பு கொண்டு சேவைகளைப் பெறமுடியும் என்றும் - யாழ். செஞ்சிலுவைச் சங்க அதிகாரி தெரிவித்தார்.

### வங்கியியல் பரீட்சை முன்னோடிக் கருத்தரங்கு

வங்கியியல் நிதியியல் பரீட்சைக்கான முன்னோடிக் கருத்தரங்கு ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு யாழ். ஆஸ்பத்திரி வீதியில் உள்ள யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவில் நடைபெறவுள்ளது. யாழ். நகர் மைய றோட்டரக்ட் கழகத்தின் அனுசரணையுடன் இக்கருத்தரங்கு நடத்தப்படுகிறது. (1-203)

## 2வாரங்களுக்குத் தேவையான மா பேக்கரிகளுக்கு நேற்று விநியோகம்

யாழ்ப்பாணம், பெப்.24

இரண்டு வார காலத்துக்குத் தேவையான கோதுமை மா யாழ். மாவட்டத்தில் உள்ள பேக்கரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

குடாநாட்டில் பாண் விநியோகத்தைத் தடங்கல் இன்றி மேற்கொள்வதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

அண்மையில் கப்பல் மூலம் எடுத்துவரப்பட்ட கோதுமை மா காரைநகர் துறைமுகத்தில் வைத்து இறக்கப்பட்டது. பின்னர் இது முன்னுரிமை அடிப்படையில் யாழ். மாவட்டத்தில் உள்ள பேக்கரிகளுக்கே பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் இரண்டு வார காலப்பகுதிக்குத் தேவையான கோதுமை மா பேக்கரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ-8)

**நாளை**

மாசி- 13
ஞாயிற்றுக்கிழமை
25.02.2007
திதி: நவமி
பின்னிரவு : 04.15
நட்சத்திரம் : ரோகிணி
பிற்பகல் : 02.53
சுபநேரம் : 09.20 - 10.50
ராகுகாலம் : 04.59 - 06.29

## 5 ரூபா முத்திரைக்கு நிலவிய தட்டுப்பாடு ஓரளவு நீங்கியது

குடாநாட்டில் நீண்ட நாள்களாக நிலவிவந்த 5 ரூபா முத்திரைக்கான தட்டுப்பாடு ஓரளவுநீங்கி யுள்ளது.

யாழ். பிரதம தபாலகத்திற்கு 5 ரூபா பெறுமதியான முத்திரைகள் எடுத்துவரப்பட்டு அவை ஏனைய தபாலகங்களுக்கு போதியளவு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று தபாலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதன் காரணமாக முத்திரைக்கு நிலவிவந்த தட்டுப்பாடு ஓரளவு குறைவடைந்துள்ளது.

மக்களது தேவைகளைப் பொறுத்து மட்டுப்படுத்தப்பட்ட அளவில் முத்திரைகள் விநியோகம் இடம்பெறவுள்ளது.

வெளிச்சந்தைகளில் முத்திரைகள் அதிக விலையில் விற்பனை செய்யப்படுவதைத் தடுக்கும் முகமாக இந்நடைமுறை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் தேவையான முத்திரைகளை விமானம் மூலம் எடுத்து வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பிரதம தபாலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (அ-203-111)

## நானாவிதப் பொருள்களுக்கான கட்டளைகளை இன்று செயலகத்தில் பெறுமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், பெப்.24

கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டிருந்த நானாவிதப் பொருள்களின் விநியோகத்தை உடன் ஆரம்பிக்குமாறு ப.நோ.கூ.சங்கங்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

சகல ப.நோ.கூ.சங்கங்களும் இன்று காலை [illegible] மணிக்கு யாழ். செயலகத்தில் வழங்கற் கட்டளைகளைப் பெற்றுக்கொள்ளும்படியும் -

உடன் குறிப்பிட்ட களஞ்சியங்களில் இருந்து பொருள் களைப் பெற்று மக்களுக்கு விநியோகம் செய்யும் படியும் - யாழ். செயலகம் அறிவுறுத்தியுள்ளது. (அ-1-8)

**குடாநாட்டின் ட்டிச் செய்திகள்** யாழ்ப்பாணம்

### ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள்

வலிகாமம் கல்வி வலய பாடசாலை ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளன.

தரம் 6 இல் சங்கீதம், சைவ சமயம் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களில் -

உடுவில், தெல்லிப்பழை ஆகிய கோட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு இன்று மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும் -

சண்டிலிப்பாய், சங்கானைக் கோட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு நாளை மானிப்பாய் மகளிர் கல்லூரியிலும் - செயமலமர்வுகள் இடம்பெறவிருக்கின்றன.

தரம் 10 இல் முயற்சியாண்மைக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இன்று இராமநாதன் கல்லூரியில் செயலமர்வு நடைபெறும்.

### மருத்துவ முகாம்கள்

மீசாலை, அல்லாரைப் பிரதேச மக்களுக்கான இலவச மருத்துவ முகாம் சாவகச்சேரி லயன்ஸ் கழக ஏற்பாட்டில் நாளை ஞாயிற்றுக் கிழமை மீசாலை கிழக்கு கமலாம்பிகை வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (1-202)

* * *

அனலைதீவு ப.நோ.கூ.சங்கத்தின் ஏற்பாட்டில் ஊர்காவற்றுறை லயன்ஸ் கழகத்தின் ஆதரவுடன் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் பிற்பகல் 4 மணி வரை அனலை தீவு சதாசிவம் மகாவித்தியாலயத்தில் இலவச மருத்துவ முகாம் நடைபெறவுள்ளது. (1-202-111)

### முகாமைத்துவ உதவியாளர் போட்டிப் பரீட்சை

வட மாகாண முகாமைத்துவ உதவியாளர் சேவை வகுப்பு II இலுள்ள அலுவலர்களை வகுப்பு I இற்குத் தரமுயர்த்தும் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் மாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவால் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களை யாழ். பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் பார்வையிடலாம் என பிராந்திய ஆணையாளர் தெரிவித்தார். (202-75)

### புத்தகத் திருவிழா

அறவழிப் போராட்டக் குழு நிறுவனத்தின் மாணவருக்கான புத்தகத் திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலையில் நடைபெறுகிறது.

நிறுவனத்தின் வெள்ளிவிழா ஆண்டையொட்டி மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தினை ஊக்குவிக்கும் பொருட்டு இத் திருவிழா நடத்தப்படுகிறது.

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் இவ்விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்கின்றார். (1-111)

### போட்டிப் பரீட்சை

பொதுமுகாமைத்துவ உதவியாளர்களை அதிசிறப்பு வகுப்பு பதவியுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் யாவும் பரீட்சைத் திணைக்களத்தால் உரிய அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. (1-51)

### புத்தகம் கட்டுநர் நேர்முகப் பரீட்சை

பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் புத்தகம் கட்டுநர் பதவிக்கான ஆள்சேர்ப்பு நேர்முகப் பரீட்சை அடுத்த வார இறுதியில் கொழும்பில் நடத்தப்படவுள்ளது.

இப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களை நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு யாழ். செயலகத்திற்கு சமுகமளித்து பயணத்தை உறுதிப்படுத்துமாறு யாழ். அரச அதிபர் கேட்டுள்ளார். (1-202)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வண.பிதா ஜிம் பிறவுண் காணாமற் போனது குறித்து விரைவில் விசேட ஆணைக்குழு விசாரணை

கொழும்பு, பெப். 24

ஆறு மாதங்களுக்கு முன்னர் காணமற்போன கத்தோலிக்க மத குருவான வண. பிதாஜிம் பிறவுண் தொடர்பான விசாரணைகளை, மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட விசேட விசாரணை ஆணைக்குழு மேற்கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

படையினருக்கும், விடுதலைப் புலிகளிற்கும் இடையிலான மோதல் உச்சக் கட்டத்தை அடைந்திருந்த தருணத்தில், கடந்த ஓகஸ்ட் மாதம் 20ஆம் திகதி 34 வயதான வண. பிதா ஜிம் பிறவுண் யாழ்ப்பாணத்தில் தன்னுடைய உதவியாளருடன் பயணம் செய்துகொண்டிருந்தபோது காணமல்போனார்.

படையினரின் முழுமையான கட்டுப்பாட்டிலுள்ள அல்லைப்பிட்டிப் பகுதியிலுள்ள இராணுவச்சோதனைச் சாவடி ஒன்றின் முன்பாகவே இவர் தனது உதவியாளரான விமலதாஸுடன் இறுதியாகக் காணப்பட்டார்.

வண. பிதாவுக்கும், அவரது உதவியாளருக்கும் என்ன நடந்தது என்பதைக் கண்டறியும் முகமான விசாரணைகளை நடத்துமாறு கத்தோலிக்க அமைப்புகளும், மனித உரிமைகளுக்காகக் குரல்கொடுக்கும் நிறுவனங்களும் அரசைத் தொடர்ந்தும் வலியுறுத்தி வந்துள்ளன.

இலங்கைக்கான பாப்பரசரின், தூதுவர் வண. மரியோ செனாரி ஆரம்பம் முதலே இந்த விடயத்தில் கவனத்தைச் செலுத்தி வந்தார். காணாமற்போன இருவரது குடும்பத்தினருடைய இல்லங்களுக்கும் நேரில் சென்றிருந்தார். இந்த சோகமான செய்தியை பாப்பரசருக்கும் தெரியப்படுத்தியிருந்தார்.

ஆட்கடத்தல்கள், படுகொலைகள் மற்றும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகளை நடத்துவதற்காக மஹிந்த ராஜபக்ஷ விசாரணைக் குழு ஒன்றை நியமித்தார். சில நாட்களுக்கு முன்னர்தான் இந்த ஆணைக்குழு தன்னுடைய விசாரணைகளை ஆரம்பித்தது.

2005 ஓகஸ்ட்டில் இடம்பெற்ற முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் படுகொலை, 2006 ஓகஸ்ட்டில் 'பட்டினிக்கு எதிரான அமைப்பு' என்ற அரச சார்பற்ற நிறுவனத்தின் பணியாளர்கள் 17 பேர் கொல்லப்பட்டமை, கிழக்கு மாகாணத்தில் மூதூரில் முஸ்லிம்கள் கொல்லப்பட்டமை போன்ற சம்பவங்கள் தொடர்பாகவே இந்த ஆணைக்குழு விசாரணைகளை நடத்தவிருக்கிறது. இவ்விசாரணைகளை அனைத்துலக கண்காணிப்பாளர்கள் மேற்பார்வையிடுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

# புலிகளுடன் தொடர்பு வைத்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

## கட்சித் தலைவர்களுக்கு கருணாநிதி எச்சரிக்கை

சென்னை, பெப். 24

தமிழ் நாட்டிலிருந்து ஆயுதங்கள், வெடிபொருட்கள் மற்றும் ஏனைய உபகரணங்களை விடுதலைப்புலிகள் கடத்துகின்றார்கள் என்ற செய்தி தமிழகத்தில் பரவலாக அடிபடும் சூழலில், தடை செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தோடு ஏதேனும் கட்சிகளின் தலைவர்களுக்கு தொடர்பிருக்கின்றமை கண்டுபிடிக்கப்பட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தமிழரசு முதல்வர் மு. கருணாநிதி எச்சரித்திருக்கின்றார்.

ஆளும் தி. மு. கவின் உத்தியோகபூர்வ பத்திரிகையான முரசொலியில் நேற்று அவர் வரைந்த கடிதம் வழமைபோல பிரசுரமாகியிருந்தது.

அதிலேயே தமிழீழ விடுதலைப்புலிகளுடன் ஏதேனும் கட்சித் தலைவர்களுக்குத் தொடர்பு இருப்பது உறுதிப்படுத்தப்பட்டால் தயவு தாட்சண்யம் காட்டாமல் நடவடிக்கை எடுக்கும்படி தாம் கடும் உத்தரவு பிறப்பித்திருக்கின்றார் எனக் கருணாநிதி குறிப்பிட்டிருக்கின்றார்.

புலிகளுக்கு ஆயுதங்கள் விநியோகிப்போர் குறித்து கடுமையான கண்காணிப்பு மேற்கொள்ளப்படுகின்றது. சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர். வெடிமருந்துகளும், ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டதுடன் அவை அழிக்கப்பட்டுமுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

''நாட்டினது நலன் மற்றும் பாதுகாப்பை முன்னிலைப்படுத்தி மத்திய அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளை, மாநில அரசு புறமொதுக்கி, இலங்கைத் தமிழர் விடயத்தில் தன்பாட்டில் தலையிடும் என எவரும் கனவு காணக்கூடாது.'' - என்றும் அவர் கூறினார்.

''இலங்கையில் அப்பாவித் தமிழர்களை அரச இராணுவத்தால் படுகொலை செய்யப்படுவதிலிருந்து காப்பாற்றுங்கள் என்று மத்திய அரசுக்கு அரசியல் கட்சிகள் விடுக்கும் கோரிக்கைக்கும் விடுதலைப் புலிகளுக்கு வெடிபொருள்களும், ஆயுதங்களும் விநியோகிக்கப்படும் மையமாக மாநிலத்தைப் பயன்படுத்துவதற்கும் உள்ள தெளிவான வித்தியாசம் மாநில அரசுக்கு நன்கு தெரியும்.'' - என்றும் அவர் குறிப்பிட்டார்.(உ)

## வவுனியாவில் பதற்றம்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போர்வெடிக்கலாம் என்ற அச்சம் எல்லைப் பகுதி மக்கள் மத்தியில் தோன்றியுள்ளது. போர்நிறுத்த உடன்படிக்கை ஐந்தாவது ஆண்டை நிறைவு செய்வதை ஒட்டி பெருந் தாக்குதல்கள் நடத்தப்படலாம் எனப் பரவிய தகவல்களைஅடுத்தே வவுனியாவில் பெரும் பதற்றம் காணப்படுகிறது.

இதேசமயம் -

வவுனியாவில் பணியில் ஈடுபட்டிருந்த போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவினரின் பிரசன்னம் நேற்றுமுதல் காணப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு வின் உறுப்பினர்கள் கடந்த ஒரு வார காலமாகவே அங்குள்ள அலுவலகத்தில் பிரசன்னமாகி இருக்கவில்லை. கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் பணிபுரிந்த உள்ளூர் பணி யாளர்களும் நேற்று முன்தினம் முதல் கடமைக்குச் சமுகமளிக்கவில்லை.

பாதுகாப்பு விடயங்களுக்காக போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு உறுப்பினர்கள் வவுனியாவில் இருந்து வெளியேறியுள்ளனர் என்று கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் ஒருவர் கூறியிருப்பதாக ஏ.எவ்.பி. செய்தி நிறு வனம் தெரிவித்திருக்கிறது.

### மக்கள் மத்தியில் பெரும் பீதி

இதேவேளை -

கோரக்கொலைகள், கடத்தல்கள் காரணமாக பெரும் பீதி உருவாகியிருக்கும் சூழலில் வெடிகுண்டுப் புரளிகளும் வவுனியா மக்களை பீதி கொள்ள வைத்துள்ளன. இரம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் நண்பகல்வேளை வெடிகுண்டு வைக்கப்பட்டிருப்பதாக விடுக்கப்பட்ட அச்சுறுத்தலால் அங்கு மாண வர்கள் பெரும் அல்லோல கல்லோலப்பட நேர்ந்தது. இவ்வாறு வெடிகுண்டுப் புரளி விடுக்கப்பட்ட அதே தினத்தன்று - நேற்று முன் தினம் - வவுனியா நகரப் பகுதியில் உள்ள இரண்டு பிரபல இரும்பு விற்பனை நிலையங்களில் இருந்து சக்தி வாய்ந்த வெடிகுண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

இரண்டு வர்த்தகநிலையங்களுக்குள்ளும் ஒரேசமயத்தில் வெடிகுண்டுகள் வைக்கப்பட்ட செய்தி வவுனியா நகரை ஒரு கலக்குக் கலக்கியது. பீதியடைந்த நகரவாசிகள் வீதிகளில் ஓட்டம் எடுத்தனர். இந்த இரு குண்டுகளும் பின்னர் படையினரால் பாதுகாப்பாகக் மீட்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டன.

இதனிடையே -

வவுனியாவில் செயற்படும் வெளிநாட்டு அரசசார்பற்ற தொண்டு நிறுவனங்களின் சர்வதேச பிரதிநிதிகள் சிலர் பதற்றம் காரணமாக அங்கிருந்து கொழும்பு திரும்பியுள்ளனர் என்று ஒரு தகவல் தெரிவித்தது. (ஐ-312)

## கற்பிட்டிக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னர் கூறியுள்ளனர்.

இந்தப்படகுகளில் ஒன்றில் 3 பேரும் மற்றைய படகில் 6பேரும் இருந்தனர் என்று கடற்படைப் பேச்சாளர் கொமாண்டர் ஜே. பி. தஸநாயக்க தெரிவித்துள்ளார்.

கடற்படையினர் மேற்கொண்ட இந்தத் தாக்குதலில் ஒரு படகு தீப்பற்றி எரிந்த தாகவும் மற்றைய படகு நீரில் மூழ்கியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ஒற்றை ஆட்சியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராஜ் கொல்லப்பட்டதானது துரதிஷ்டமானது. அவர் தனது கடமைகளைத் தெளிவாகப் புரிந்துகொண்டு செயற்பட்டவர்.

அவரது இறுதி அஞ்சலியில் நான் கலந்து கொண்டதன் காரணமாக நான் புலி என்று வர்ணிக்கப்பட்டேன். இந்தச் சபையில் உள்ளவர்கள் என்னைப் புலி என்று கூறிவிட்டு ரவிராஜின் அனுதாபப் பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றியதையும் நான் கண்டேன்.

ரவிராஜ் ஒருபோதும் நாட்டைப் பிரிக்க விரும்பவில்லை. தமிழ் மக்களின் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்றே அவர் கூறிவந்தார்.

ரவிராஜ் கொலை செய்யப்பட்டதன் மூலம் தெற்கு மக்கள் அவரது கொலையைக் கண்டிக்கின்றனர். என்ற செய்தி சர்வதேசத்திற்கு விடுக்கப்பட்டது.

இந்த நிலையில், ஒற்றை ஆட்சி ஐக்கிய ராஜ்யம் போன்றவற்றுடன் ஒட்டி நிற்காமல் சமஷ்டி மூலம் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண ஜனாதிபதி முயற்சி செய்கிறார். அவரின் முயற்சியுடன் பலர் ஒத்து நிற்கின் றனர்.

சமஷ்டிக்கான வாய்ப்பு வருகின்றது.

நான் அதுபற்றிப் பேசுவதால் எனக்கு இணையத்தளம் ஊடாக அச்சுறுத்தல் விடுக் கப்பட்டு[illegible] (ஐ)

## தமிழர்கள் தனியரசு அமைக்க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிங்கள, பௌத்த பேரினவாத அரசின் கடும் போக்குக் காரணமாக, தமிழ் மக்களின் நாளாந்தப் பிரச்சினைகளுக்கும், உடனடி மனிதாபிமானப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணும் பொருட்டு சர்வதேசத்தின் அனுசரணையுடன் அரசுக்கும் புலிகளுக்கு மிடையில் இணக்காப்பாடு காணப்பட்டு உருவாக்கப்பட்ட உபகுழு, சிரான் அமைப்பு, சுனாமிப் பொதுக்கட்டமைப்பு என்பனவும் ஜெனிவா1, ஜெனிவா 2 உடன்படிக்கைகளும் செயலிழந்து போயுள்ளன.

மறுபுறத்தில் சிங்கள அரசானது இராணுவத் தீர்வின்மீது நம்பிக்கை கொண்டு தமிழ்மக்கள் மீது இராணுவ வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டுள்ளதுடன் அவசரகாலச் சட்டம், பயங்கரவாத தடைச் சட்டம் என்பவற்றினைப் பயன்படுத்தி சமாதான உடன்படிக்கை நடைமுறையிலிருந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும் 2,13,000 தமிழ் மக்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளதுடன், 1,561இற்கும் அதிகமான மக்கள் கொலை செய்யப்பட்டும், 635இற் கும் அதிகமானவர்கள் கடத்தப்பட்டுமுள்ளனர்.

### இறைமையைப் பாதுகாப்பதாக அரச பயங்கரவாதம்

கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழ் மக்களின் இனப்பிரச்சினை தொடர்பாக இலங்கை அரசதரப்பு எவ்வித ஆக்கபூர்வ நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாமல் இருந்தது மட்டுமல்ல இராணுவத் தீர்வின் மீது நம்பிக்கை கொண்டு தமிழர் மீது இராணுவ முறைகளை ஏவி தமிழர் தாயகப் பிரதேசங்களை ஆக்கிரமித்தும் உள்ளது.

மேற்படி ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும் மீறப்பட்டமையும், படுகொலைகள், ஆள் கடத்தல்கள், சித்திரவதைகள், தமிழர் தாயகப் பிரதேசங்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதுடன் மக்கள் பலவந்தமாக அகதிகளாக்கப்பட்டமையும் ஸ்ரீலங்காவின் இறைமையைப் பாதுகாக்கின்றோம் என்ற போர்வையில் இலங்கை அரசின் பயங்கரவாதத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளாகும்.

இவ்வாறான சமாதானத்திற்கான நம்பிக்கைகளைக் கொடூரமாகத் தாக்கிச் சிதறடித்த தொடர்ச்சியானதும் பாரதூரமானதுமான யுத்த நிறுத்த மீறல்களைக் கண்டு கொள்ளாத சர்வதேச சமூகம் இலங்கையின் இறைமை பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் நாடு பிளவுபடக் கூடாது என்றும் மட்டுமே பேசி வந்துள்ளது.

### ஐரோப்பிய ஒன்றியம் செய்த தவறு

அதேவேளை ஐரோப்பிய ஒன்றியம் தமிழீழ விடுதலைப்புலிகளைத் தடைசெய்தமையானது அந்த அமைப்பின் அவசரப்பட்ட தவறான முடிவாக அமைந்துள்ளது மட்டுமன்றி இலங்கைத் தீவில் மிகப் பாரிய யுத்தம் வெடிப்பதற்கான முழுமையான புறச்சூழலை உருவாக்கியுள்ளது. கடந்த ஐந்து ஆண்டு சமாதான காலத்தில் தமிழர் தரப்பு எல்லை மீறிய பொறுமையைக் கடைப்பிடித்து வந்துள்ளதுடன் சர்வதேசத்திற்கு மதிப்பளித்து பாரிய விட்டுக் கொடுப்புடனும் நடந்துகொண்டுள்ளது. ஆனாலும் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் தொடர்பாக சர்வதேசமூகத்தின் அணுகுமுறையில் சாதகமான மாற்றங்கள் ஏற்படாமல் இருப்பதானது பெரும் ஏமாற்றத்தினைத் தருகின்றது. இந்நிலைப்பாடு சிங்கள அரசை சமாதானப் பாதையில் இருந்து விலகி யுத்தத்தினை நோக்கிச் செல்லத் தூண்டியுள்ளது.

### தனது இறைமை பாதிக்கப்படுவதை சர்வதேசம் அனுமதியாது என்ற நம்பிக்கை

ஏனெனில் தாம் தமிழ்த் தேசிய இனத்தின் உரிமைகளை அங்கீகரித்தால் என்ன அங்கீகரிக்காவிட்டால் என்ன இலங்கையின் இறைமை பாதிக்கப்படுவதையோ நாடு பிளவுபடுவதையோ சர்வதேச சமூகம் அனுமதிக்காது என்ற நம்பிக்கை அரசுக்கு ஏற்பட்டுள்ளது. உபகுழு, சிரான் அமைப்பு, சுனாமிக் கட்டமைப்பு என்பன செயலற்றுப் போனமைக்கும் இனப்பிரச்சினைக்காண தீர்வு தொடர்பாக விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை வரைபை சிங்கள அரசு பரிசீலனைக்காகக் கூட எடுக்காமல் போனமைக்கும், ஜெனிவா1, ஜெனிவா2 பேச்சுகள் தோல்வியடைந்தமைக்கும் சர்வதேச சமூகத்தின் மேற்படியான நிலைப்பாடே காரணமாக அமைந்துள்ளது.

### வடக்கு - கிழக்கைப் பிரித்தமைக்கு சர்வதேசத்தின் தெளிவற்ற அணுகுமுறையே காரணம்

இது மட்டுமன்றி இந்தியாவுடன் 1987இல் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையைக் கிழித்தெறியும் வகையில் 19 வருடங்களுக்குப் பின் தமிழ்த் தேசிய இனத்தின் தாயகத்தினை வடக்கு என்றும் கிழக்கு என்றும் இலங்கை அரசு பிரித்தமைக்கும் சர்வதேசத்தின் தெளிவற்ற அணுகுமுறையே காரணமாகும்.

இந்தியாவுடன் செய்துகொள்ளப்பட்ட ஒரு சர்வதேச உடன்படிக்கையினையே அரசினால் மீறமுடியுமாக இருந்தால் தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணயமும் பாதுகாப்பும் அங்கீகரிக்கப்படாத நிலையில் சர்வதேசத்தின் முன்னிலை [illegible] அரசுடன் செய்யப்படும் எந்த ஓர் ஒப்பந்தமும் கிழித்தெறியப்பட மாட்டாது என்பதற்கு எந்தவிதமான உத்தரவாதமும் இல்லை என்பதனை திட்டவட்டமாக நாம் தெரிவித்தே தீரவேண்டியுள்ளது.

### கசப்பான யதார்த்தத்தை புரிந்துகொள்ளவேண்டும்

இந்த நிலையில் தமிழ் இனத்தின் தேசியப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியாக தீர்வு காண்பதற்கு ஏதுவாக எந்தவொரு ஆக்கபூர்வமான அணுகுமுறையையும் கருத்தில் கொள்ளாது முற்றுமுழுதாக இராணுவத் தீர்விலேயே நாட்டம் கொண்டு ஸ்ரீலங்கா அரசு செயற்பட்டுக் கொண்டு இருக்கின்றது என்பதனையும் நாம் சர்வதேச சமூகத்தின் கவனத்துக்குச் சமர்ப்பிக்கின்றோம்.

இந்தக் கசப்பான யதார்த்தத்தின் பின் அதன் சகல விதமான பரிமாணங்களிலும் புரிந்து கொண்டு தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டத்தினை அங்கீகரித்து எமது பிறப்புரிமையான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் எமக்கென ஒரு தனியரசை அமைப்பதற்கு அனைத்து உதவிகளையும் நல்குமாறு சர்வதேச சமூகத்தினை நாம் கோரி நிற்கின்றோம்.

இலங்கைத் தீவில் மிக நீண்டதும், தொடர்ச்சியுமான வரலாற்றைக் கொண்டிருக்கும் எமது இனத்திற்கு சகல வழிகளிலும், சகல முனைகளிலும் ஸ்ரீலங்கா அரசினால் நீதி மறுக்கப்பட்டிருக்கும் நிலையில் இதனைத் தவிர எமக்கு வேறு வழி கிடையாது என்பதனையும் நாம் தெரிவித்துக் கொள்கின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## கூடுதல் விலைக்கு விற்றவர் பரு. நீதிமன்றத்தில் ஆஜர்

யாழ்ப்பாணம். பெப், 24.

பருத்தித்துறையில், அரச அதிபரால் நிர்ணயிக்கப்பட்ட விலைகளை விட கூடுதல் விலைக்கு பொருள்களை விற்பனை செய்த ஒருவர் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் செய்யப்பட்டார்.

பிரஸ்தாப நபரை பிணையில் விடுவித்த பருத்தித்துறை நீதிவான் க. அரியநாயகம் எதிர்வரும் திங்கட்கிழமை நீதிமன்றத்தில் அவரை ஆஜராகுமாறு உத்தரவிட்டார்.

பிரஸ்தாப நபர் சவர்க்காரம், ரின்சோசலவைத்தூள் போன்ற பொருள்களை கூடுதல் விலைக்கு விற்பனை செய்ததாக பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.(அ-1)

## யாழ். இளைஞர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளது.

இவர் யாழ்ப்பாணத்திலிருந்து இடம் பெயர்ந்து மன்னார் பிரப்பங்கண்டல் பகுதியில் வசித்து வந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஓட்டோ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கன்னி வீதியில் வசிக்கும் ஸ்ரான்லி ரொபேட் (வயது 42) என அடையாளங்காணப்பட்டார்.

குறிப்பிட்ட ஓட்டோ சாரதி நேற்றுப் பிற்பகல் ஓட்டோவில் சென்றுகொண்டிருந்தவேளை அவரை வழிமறித்த இனந்தெரியாத நபர்கள் சுட்டுவிட்டு தப்பிச்சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக திருகோணமலை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## குடாநாட்டில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவுறுத்தியுள்ளது.

இந்த ஏற்பாடு மக்களின் பாதுகாப்புக்காக படையினர் எடுத்துள்ள பாதுகாப்பு நடவடிக்கை என்றும் தெரிவிக்கப்பட்டது.

யாழ். பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் பலாலியில் இருந்து ஒலிபரப்பாகும் வானொலி மூலம் நேற்றிரவு விடுத்த விசேட அறிவித்தலில் மேற்கண்டவாறு அறிவிக்கப்பட்டது.

### இன்றைய ஊரடங்கு

இதேவேளை -

நேற்றிரவு 7 மணிக்கு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட ஊரடங்கு இன்று அதிகாலை 5 மணிக்கு நீக்கப்படும் என்றும் பாதுகாப்புத் தலைமையகம் அறிவித்தது. (அ-1)

## நிர்ணயித்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் திடீர் பரிசோதனைகளை மேற்கொள்ளவிருக்கின்றனர். அச்சோதனைகளில் குற்றமிழைத்ததாக கண்டுபிடிக்கப்படும் வர்த்தகர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

அதிக விலைக்கு விற்கப்படும் பொருள்கள் மட்டுமல்லாமல், வர்த்தக நிலையத்தில் உள்ள சகல பொருள்களும் அரச அதிபரால் பறிமுதல் செய்யப்படும் - என்றும் நீதிவான் தெரிவித்தார். (அ-1)

## கிழக்குப் பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படையினர் கவனஞ்செலுத்தி வருகின்றனர் என்று மட்டக்களப்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கூறியிருக்கிறார். குறிப்பாக கைதுசெய்யப்பட்ட பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தர்களை விடுதலை செய்யுமாறு பல்கலைக்கழக அதிகாரிகள் தம்மிடம் கோரினர் என்று அவர் தெரிவித்தார்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள 16 பேரில் 8 பேர் பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஆவார்கள். இவர்கள் தொடர் பாக பொலிஸார் தகுந்த விசாரணை மேற்கொண்டு, அவர்களில் எவரேனும் நிரபராதியாகக் காணப்பட்டால் அவர்களை உடனடியாக விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மேலும் கூறி னார். (ஐ)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) [illegible] கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.02.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org